இந்திய உச்ச நீதிமன்றம்

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு

உரிமையியல் மேல்முறையீடு எண் 6098/2021

முகமது ராசா மற்றும் ஒருவர் ...மேல்முறையீட்டாளர்கள்

-எதிர்-

கீதா என்கிற கீதா தேவி ... எதிர்மேல்முறையீட்டாளர்கள்

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. எம்.ஆர்.ஷா

1. புது தில்லியிலுள்ள, தில்லி உயர் நீதிமன்றம், உரிமையியல் சீராய்வு மனு எண் 175/2019-இல் அறிவார்ந்த விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட 27.7.2019-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவை செல்லுபடியற்றதென நீக்கறவு செய்து அனுமதித்ததையடுத்து, உ.வி.மு.ச., கட்டளை XII, விதி 6-இன் கீழான ஏற்புரையின்பேரில் வெளியேற்றுகை தீர்ப்பாணை பிறப்பித்ததால், மேற்படி உரிமையியல் சீராய்வு மனுவில் உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட 14.11.2019-ஆம் தேதியிடப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவால் திருப்தியடையாமல் மனக்குறையுற்ற முதன்மை பிரதிவாதிகள் இந்த மேல்முறையீட்டைத் தாக்கல் செய்துள்ளனர்.

2. இம்மேல்முறையீட்டுக்கு வழிவகுத்த சங்கதிகள் இரத்தினச் சுருக்கமாகப் பின்வருமாறு:

2.1. எதிர்மேல்முறையீட்டாளரான முதன்மை வாதி, தில்லி, மந்தவாலி, ஈஸ்ட் ஸ்கூல் பிளாக், தரைதளம் எண் 246/ 4-இல் உள்ள சொத்து (இதில் இதற்குப் பிறகு வழக்குச் சொத்து எனக் குறிப்பிடப்படும்) தொடர்பாக உடைமை, வலியுறுத்துக் கட்டளை, நிரந்தர உறுத்துக்கட்டளை, இடைக்கால

ஆதாயம் ஆகியவற்றுக்காக தில்லி, (கிழக்கு) கார்கர்தூமா, மூத்த உரிமையியல் நீதிபதி அவர்களின் நீதிமன்றத்தில் இதிலுள்ள முதன்மை பிரதிவாதிகளான மேல்முறையீட்டாளர்களுக்கு எதிராக உரிமையியல் வழக்கு எண் 805/2018- ஐ தாக்கல் செய்திருந்தார்.அவர் வழக்குச் சொத்தில் 15.1.2013-ஆம் ஆண்டு முதற்கொண்டு சட்டப்படியான உரிமையாளர் என்றும், 14.3.2016-ஆம் தேதியிடப்பட்ட வாடகை ஒப்பந்தப்படி, 1-ஆம் பிரதிவாதி வாடகைதாரர் என்றும், இவர், வாதிக்கு தகவல் ஏதும் அளிக்காமல் இரண்டாம் பிரதிவாதிக்கு சட்டவிரோதமாக உள்-வாடகைக்கு விட்டார், ஆதலால் 1-ஆம் பிரதிவாதியின் வாடகையுரிமை வாதியால் 17.7.2018 அன்று திரும்பப் பெறப்பட்டுள்ளது/முடிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் வழக்குரையில் வலியுறுத்திக் கூறப்பட்டது. ஆதலால் வாதி, உரிமையாண்மையைக் கோரியதுடன் 1-ஆம் முதன்மை பிரதிவாதி வாடகைதாரர் எனவும் கோரினார்.

2.2. பிரதிவாதிகள் எதிர்வழக்குரையை (இதன் பொருளடக்கங்கள் இதில் இதன்கீழ் விவாதிக்கப்பட வேண்டும்) தாக்கல் செய்தனர் என்பது இக்கட்டத்தில் குறிப்பிடவேண்டியதாகும். பிரதிவாதிகள் சார்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்தபிறகு, வாதி வழக்குச் சொத்தின் உரிமையாளர் என்றும், 1-ஆம் பிரதிவாதி வாடகைதாரர் என்றும் பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் ஒப்புக்கொண்டுள்ளனர் என்பதனடிப்படையில், வாதி, உ.வி.மு.ச., கட்டளை XII, விதி 6-இன் கீழான ஏற்புரையின் பேரில் தீர்ப்பாணை பிறப்பிக்க அறிவார்ந்த விசாரணை நீதிமன்றம் முன்பாக விண்ணப்பம் ஒன்றைத் தாக்கல் செய்தார். மேற்படி விண்ணப்பம், பிரதிவாதிகளின் சார்பாக எதிர்க்கப்பட்டது. பிரதிவாதிகள் சார்பாக உ.வி.மு.ச., கட்டளை XII, விதி 6-இன் கீழ் ஒரு விரிவான பதிலுரை தாக்கல் செய்யப்பட்டது. அதன்பிறகு, பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையிலிருந்து கருத்துரைத்து அறிவார்ந்த விசாரணை நீதிமன்றம் 27.7.2019-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவின்படி மேற்படி விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்தது. 2-ஆம் பிரதிவாதி, வழக்குச் சொத்தில் வாதியின் உரிமையாண்மையையும், அவர்களது வாடகையுரிமையையும் குறித்து எந்த

ஏற்புரையும் செய்யவில்லை என்பது தெளிவாகவே எளிதில் உணரத்தக்கதாகும்.

3. உ.வி.மு.ச., கட்டளை XII, விதி 6-இன் கீழான விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்து, ஏற்புரையின்பேரில் தீர்ப்பாணைப் பிறப்பிக்க மறுத்து, அறிவார்ந்த விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட 27.7.2019-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவில் திருப்தியடையாமல், மனக்குறையுற்று வாதியான இதிலுள்ள எதிர்மேல் முறையீட்டாளர் உயர் நீதிமன்றம் முன்பாக சீராய்வு மனுவைத் தாக்கல் செய்தார்.எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவின் மூலம் உயர் நீதிமன்றம் மேற்படி சீராய்வு விண்ணப்பத்தை அனுமதித்து, உ. வி.மு.ச., கட்டளை XII, விதி 6-இன் கீழான விண்ணப்பத்தை தள்ளுபடி செய்து அறிவார்ந்த விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை செல்லுபடியற்றதென நீக்கறவு செய்து, அதனைத் தொடர்ந்து, வாதிக்கு ஆதரவாகவும், பிரதிவாதிகளுக்கு எதிராகவும் வெளியேற்றுகைக்கான தீர்ப்பாணையைப் பிறப்பித்தது.

2-ஆம் பிரதிவாதி வழக்குச் சொத்தின் முழுமையான உரிமையாளராயிருந்து, வாதிக்கு தொகை ரூ.19 இலட்சத்தைச் செலுத்தியுள்ளதால், அவர் உரிமையாளராக வழக்குச் சொத்தின் உடைமையிலுள்ளார் என்பது எதிர்வழக்குரையிலுள்ள இங்குள்ள பிரதிவாதிகள் மேல்முறையீட்டாளர்கள் சார்பிலான குறிப்பிட்ட வழக்காகும் என்பதை இக்கட்டத்தில் குறிப்பிடவேண்டியதாகிறது.2-ஆம் பிரதிவாதி, ஒப்பந்தம்/உடன்படிக்கையின் குறித்தவகை நிறைவேற்றத்திற்காக வாதிக்கு எதிராக உரிமை வழக்கைத் தொடுத்து, அதனடிப்படையில் 2-ஆம் பிரதிவாதி வழக்குச் சொத்தின் உரிமையாளர் எனக் கோருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது, மேற்படி உரிமை வழக்கு இதுவரையிலும் நிலுவையிலிருந்து வருகிறது.

4. உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவில் திருப்தியடையாமல் மனக்குறையுற்ற முதன்மை பிரதிவாதிகள் இந்த மேல்முறையீட்டைத் தாக்கல் செய்துள்ளனர்.

5. வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளின்படி, உயர் நீதிமன்றம், உ.வி.மு.ச., கட்டளை XII, விதி 6-இன் கீழான ஏற்புரையின்பேரில் தீர்ப்பாணை பிறப்பித்ததில் முக்கியமான அளவில் தவறிவிட்டது என்று மேல்முறையீட்டாளர்களான முதன்மை பிரதிவாதிகள் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. சானோபர் அலி அவர்களால் தீவிரமாக வாதிடப்பட்டுள்ளது. வாதி உரிமையாளர் என்றும், பிரதிவாதிகள்/ 1-ஆம் பிரதிவாதி வாடகைதாரர் என்றும், பிரதிவாதிகளின் தரப்பில் தெளிவான ஏற்புரை இல்லை என்பதான அச்சங்கதியை மதிப்பீடு செய்து பரிசீலிக்க உயர் நீதிமன்றம் தவறிவிட்டது என்றும் பணிந்துரைக்கப்படுகிறது. ஆகவே, தெளிவான மற்றும் ஐயத்திற்கிடமற்ற ஏற்புரை ஏதுமில்லாதநிலையில், வாதி, ஏற்புரையின்பேரில், தீர்ப்பாணைக்குரியவரல்லர் என வாதிடப்பட்டுள்ளது. (2011) 15 எஸ்.சி.சி. 273-இல் அறிக்கையிடப்பட்ட ஹிமானி அலாய்ஸ் லிமிடெட் -எதிர்- டாடா ஸ்டீல் லிமிடெட் என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்முடிவின்மீது சார்ந்துநிற்கப்பட்டது.

5.1. மேலும், வாதி வழக்குச் சொத்தின் உரிமையாளர் என பிரதிவாதிகள் தரப்பில் குறிப்பிட்ட ஏற்புரைகள் இல்லை என்பதோடன்றி, வாதியால் நிறைவேற்றப்பட்ட விற்பனை உடன்படிக்கையைத் தொடர்ந்து, அவர் வழக்குச் சொத்தின் முழுமையான உரிமையாளர் என்பதும், 2-ஆம் பிரதிவாதி, வாதிக்கு தொகை ரூ .19 இலட்சத்தைச் செலுத்தியுள்ளார், ஆதலால், அவர் உரிமையாளராக வழக்குச் சொத்தின் உடைமையிலுள்ளார் என்பதும் 2-ஆம் பிரதிவாதி தரப்பிலான குறிப்பிட்ட வழக்காகும்.

5.2. மேலும் மற்றவகையாகவும், விற்பனை ஒப்பந்தத்தின் குறித்தவகை நிறைவேற்றத்திற்காக வாதிக்கெதிராக 2-ஆம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட நிலைமுறையான உரிமை வழக்கு அறிவார்ந்த விசாரணை நீதிமன்றம் முன்பாக நிலுவையிலுள்ளது என்றும், அவ்வுரிமை வழக்கில் 2-ஆம் பிரதிவாதி சார்பாக ஓர் உறுத்துக்கட்டளை உள்ளது என்றும் மேல்முறையீட்டாளர்கள் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞரால் பணிந்துரைக்கப்பட்டுள்ளது.

6. இம்மேல்முறையீடு, எதிர்மேல்முறையீட்டாளரான முதன்மை வாதி சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. ஹர்ஷ் குமார் அவர்களால் தீவிரமாக எதிர்க்கப்பட்டுள்ளது. வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளின்படியும், எதிர் வழக்குரையிலுள்ள கூற்றுகளையும் பரிசீலித்ததில், வாதி உரிமையாளர் என்று பிரதிவாதிகள் தரப்பிலான தெளிவான ஏற்புரை உள்ளதைக் காணமுடிகிறது. இதிலுள்ள பிரதிவாதிகளான மேல்முறையீட்டாளர்களின் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரையிலுள்ள உரிய கூற்றுகளை ஆராய அவற்றை அவர் எங்கள் முன் வைத்தார்.

6.1. 2-ஆம் பிரதிவாதி வழக்குச் சொத்தின் உரிமையாளர் என்பதால் அவர் ஓர் உரிமையாளராக வழக்குச் சொத்தின் உடைமையிலுள்ளார் என்பது பிரதிவாதிகளின் மிகக் குறிப்பாக 2-ஆம் பிரதிவாதியின் தரப்பு வழக்கு விவரமாகும் எனப் பணிந்துரைக்கப்பட்டுள்ளது. 2-ஆம் பிரதிவாதி விற்பனை உடன்படிக்கையின் அடிப்படையில் உரிமையாண்மை கோருகிறார் என்றும் வாதிடப்பட்டுள்ளது. விற்பனை உடன்படிக்கை என்பது உரிமையாண்மையை அளிக்கவே அளிக்காது என்றும் வாதிடப்பட்டுள்ளது.எவர் சார்பாக விற்பனை உடன்படிக்கை நிறைவேற்றப்படுகிறதோ, அவர், நிறைவேற்றாளரால் நிறைவேற்றப்பட்ட கிரைய ஆவணத்தின்படியாகவோ மற்றும்/அல்லது ஒப்பந்தத்தின் குறித்தவகை நிறைவேற்றத்திற்காக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒரு தீர்ப்பாணையின் படியாகவோ உரிமையாளராகிறார். 2-ஆம் பிரதிவாதியின் வழக்கின்படியாகவுங்கூட, குறித்தவகை நிறைவேற்றத்திற்கான உரிமை வழக்கு நிலுவையிலுள்ளதாகப் பணிந்துரைக்கப்பட்டுள்ளது.

6.2.எதிர்வழக்குரையை ஒட்டுமொத்தமாகப் பரிசீலித்தால், அவ்வழக்கில், வாதி உரிமையாளர் என்பதும், 1-ஆம் பிரதிவாதியின் வாடகையுரிமையுங்கூட பிரதிவாதிகள் தரப்பிலான ஏற்புரையாக உள்ளதென பணிந்துரைக்கப் பட்டுள்ளது. இருப்பினும் 2-ஆம் பிரதிவாதி உரிமையாளர் என்பது அவரது தரப்பு வழக்காகும். மேலும், ஓர் உரிமையாளராக அவர் உடைமையிலுள்ளார் என்பதற்கு சட்ட அடிப்படை இல்லை.ஆகவே வழக்கின் சங்கதிகள் மற்றும்

சூழ்நிலைகளின் அடிப்படையில், உயர் நீதிமன்றம், உ.வி.மு.ச., கட்டளை XII, விதி 6-இன் கீழான ஏற்புரையின் பேரில் தீர்ப்பாணை ஒன்றை சரியாகவே பிறப்பித்துள்ளது.

7. நாங்கள், அந்தந்த தரப்பினர்களின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர்களின் வாதங்களை விரிவாகக் கேட்டோம்.

8. மொத்தத்தில், இதிலுள்ள எதிர்மேல்முறையீட்டாளரான வாதி, தில்லி, மந்தவாலி, ஈஸ்ட் ஸ்கூல் பிளாக், தரைதளம் எண் 246/4 கொண்ட சொத்து தொடர்பான உடைமை, வலியுறுத்துக் கட்டளை, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் இடைக்கால ஆதாயம் ஆகியவற்றுக்காகவும், வழக்குச் சொத்தின் உரிமையாளர் எனக் கோரியும், 1-ஆம் பிரதிவாதி வாடகைதாரர் எனவும், 1-ஆம் பிரதிவாதி, 2-ஆம் பிரதிவாதிக்கு வழக்குச் சொத்தை/வளாகத்தை உள்-வாடகைக்கு விட்டுள்ளதாகக் கோரியும் பிரதிவாதிகளான இதிலுள்ள மேல்முறையீட்டாளர் களுக்கெதிராக உரிமை வழக்கைத் தாக்கல் செய்தார் என்பதைக் குறிப்பிடவேண்டியதாகிறது. பிரதிவாதிகள் **'தற்போது'** வாதியின் வாடகைதாரர்களாக இல்லையென்றாலும், வழக்குச் சொத்தின் உண்மையான உரிமையாளராவர் என்பது எதிர்வழக்குரையில் பிரதிவாதிகளான இதிலுள்ள மேல்முறையீட்டாளர்கள் தரப்பு வழக்காகும்.எதிர் வழக்குரையில் 1 முதல் 3 வரையிலான பத்திகளில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

> "1. மறுமொழி கூறும் பிரதிவாதிகள் தற்போது வாதியின் வாடகைதாரர்கள் அல்லர் என்றாலும், வழக்குச் சொத்தின் உண்மையான உரிமையாளர்கள் என்பதால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல. வாதி, பிரச்சினைக்குரிய வழக்குச் சொத்தினை மறுமொழி கூறும் பிரதிவாதிகளுக்கு விற்றுவிட்டார், அதற்கான சில ஆவணங்களும் 15.1.2017 மற்றும் 29.1.2017 அன்று மறுமொழி கூறும் 2-ஆம் பிரதிவாதி/சீமா பேகத்திற்கு ஆதரவாக வாதியால் நிறைவேற்றப்பட்டன, எனவே, வாதியின் உரிமை வழக்கு பெருஞ்செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்வதற்குரியதாகும்.

2. வாதி, வழக்கின் உண்மையான சங்கதிகளையும், சான்றாதாரங்களையும் மறைத்து, பொய்யான மற்றும் புனையப்பட்ட உரிமை வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.மேலும், வாதி மறுமொழி கூறும் பிரதிவாதிகளை தொல்லைப்படுத்தவும், இந்த உரிமை வழக்கைத் தாக்கல் செய்ததன் மூலம் மறுமொழி கூறும் பிரதிவாதிகளின் பொறுப்புறுதி பணத்தைப் பறிக்கவும் விரும்புகிறார்.வாதியின் உரிமை வழக்கு சட்டத்தின் கண்ணோட்டத்தில் நிலைக்கத்தக்கதல்ல, ஏனென்றால் இவ்வழக்கு, தரப்பினர்களுக்கு இடையேயான உடைமை, வலியுறுத்துக் கட்டளை, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் இடைக்கால ஆதாயம் ஆகியவற்றுக்கான உரிமை வழக்கு அல்ல, ஆனால் இது, உரிமையாண்மை, மறுமொழி கூறும் பிரதிவாதியின் ரூ .19 இலட்ச பணத்தை ஏமாற்றுதல், பறித்தல் ஆகியவை குறித்த வழக்காகும், மேலும் இது 29.1.2017 அன்று வாதியால் நிறைவேற்றப்பட்ட தரப்பினர்களுக்கிடையேயான உடன்படிக்கைக்கு ஒத்திசைந்து நடப்பதற்குரிய வழக்காகும், எனவே, வாதியின் உரிமை வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்வதற்குரியதாகும் எனப் பணிந்துரைக்கப்படுகிறது.

3. வழக்குச் சொத்து முற்றிலும் பிரதிவாதிகளுடன் தொடர்புடையதாகும். 2-ஆம் பிரதிவாதி/சீமா பேகம், வழக்குச் சொத்தின் முழுமையான உரிமையாளராவார். அவருக்கு பிரச்சினைக்குரிய வழக்குச் சொத்தில் எல்லா உரிமையும் அல்லது உரிமை நலனுமுண்டு.அவர் பிரச்சினைக்குரிய வழக்குச் சொத்தையும், வழக்குச் சொத்தின் மற்றொரு பகுதியையும் (30 சதுர கெஜம் மற்றும் 50 சதுர கெஜம் பரப்பளவு கொண்டது) வாங்கியுள்ளார்.பிரதிவாதிகள் வழக்குச் சொத்தின் இரு பகுதிகளின் அமைதியான சுவாதீனத்தை வாதியிடமிருந்து எடுத்துக் கொண்டனர்.2-ஆம் பிரதிவாதியும், வாதிக்கு எதிராக ஒப்பந்தத்தின் குறித்தவகை நிறைவேற்றம், விளம்புகை, வெளியேற்றுகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைக்கான ஒரு வழக்கை/உரிமை வழக்கைத் தாக்கல்

செய்துள்ளார், இது தில்லி, கிழக்கு, கே.கே.டி. நீதிமன்றங்கள், கற்றறிந்த கூடுதல் மாவட்ட நீதிபதி திரு சனாதன் பிரசாத் அவர்களின் மாண்புமிகு நீதிமன்றம் முன்பாக தீர்ப்புக்காக நிலுவையில் உள்ளது என்று பணிந்துரைக்கப்பட்டுள்ளது. "

ஆதலால், பிரதிவாதிகள் வழக்குச் சொத்தின் உரிமையாண்மையைக் கோருகின்றனர். 2-ஆம் பிரதிவாதி உரிமையாளராக உடைமையிலுள்ளதாகவும் கோருகிறார், உரிமையாளர் எனவும் கோருகிறார் என்பது மேற்கூறியவற்றில் இருந்து தெளிவாகிறது.வாதி, உரிமையாளராக உரிமை வழக்கைத் தாக்கல் செய்துள்ளார் என்பதையும் காணமுடிகிறது. இது பிரச்சினைக்குரியதாக இல்லை, மேலும் 2-ஆம் பிரதிவாதி, வழக்குச் சொத்து தொடர்பாக வாதியை எதிர்த்து, குறித்தவகை நிறைவேற்றத்திற்கான உரிமை வழக்கைத் தாக்கல் செய்திருந்தார் என்பது பிரதிவாதிகளின் தரப்பு வழக்காதலால் வாதிதான் உரிமையாளர் என்ற தெள்ளத்தெளிவான ஏற்புரை உள்ளது என்பதாக இது பொருள்படுகிறது.

9. 2-ஆம் பிரதிவாதியின் குறித்தவகை நிறைவேற்றத்திற்கான உரிமை வழக்கு கற்றறிந்த விசாரணை நீதிமன்றத்தால் இன்னமும் தீர்மானிக்கப்பட வேண்டியிருப்பதால், அவரை உரிமையாளர் எனக் கூற முடியாது என்பது இக்கட்டத்தில் குறிப்பிடத்தக்கதாகும்.அவரது சார்பாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு, குறித்தவகை நிறைவேற்றத்திற்கான தீர்ப்பாணை பிறப்பிக்கப்படாத வரையில் மற்றும்/அல்லது அத்தகையதொரு தீர்ப்பாணையைத் தொடர்ந்து கிரைய ஆவணம் நிறைவேற்றப்படாதவரையில் அவர் வழக்குச் சொத்தின் உரிமையாளராகச் சொல்லப்பட இயலாது. குறித்தவகை நிறைவேற்றுகைக்கான உரிமை வழக்கு தீர்மானிக்கப்படும் வரையில், வாதி-இதிலுள்ள எதிர்மேல்முறையீட்டாளர் உரிமையாளராகத் தொடர்ந்திருப்பார் மற்றும் 1-ஆம் பிரதிவாதியான இதிலுள்ள மேல்முறையீட்டாளர் வாடகைதாரராகத் தொடர்ந்திருப்பார்.

பிரதிவாதிகள் 'தற்போது' வாதியின் வாடகைதாரர் அல்லர், ஆனால், வழக்குச் சொத்தின் உண்மையான உரிமையாளர்கள் எனப் பிரதிவாதிகளால் எதிர்வழக்குரையின் 1-ஆம் பத்தியில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் இதற்குமேலே கருத்துரைக்கப்பட்டவாறு, குறித்தவகை நிறைவேற்றத்திற்கான உரிமை வழக்கு பிரதிவாதிகளின் மிகக் குறிப்பாக 2-ஆம் பிரதிவாதியின் சார்பாக தீர்மானிக்கப்படும்வரையில், அவர் உரிமையாளராகச் சொல்லப்பட இயலாது, ஆகையால், வாதியான இதிலுள்ள எதிர்மேல்முறையீட்டாளர் உரிமையாளராகத் தொடர்ந்திருப்பார், மேலும், 1-ஆம் பிரதிவாதி வாடகைதாரராக தொடர்ந்திருப்பார் என்பதாகும்.

ஆகவே, வாதியின் உரிமையாண்மை தொடர்பாக மேற்கூறியது பிரதிவாதிகளின் தரப்பு ஏற்புரையாக சரியாகவே கருதப்பட்டுள்ளது.ஆகவே, உயர் நீதிமன்றம் அவ்வகையில், உ.வி.மு.ச., கட்டளை XII, விதி 6-இன் கீழான ஏற்புரையின்பேரில் சரியாகவே தீர்ப்பாணை பிறப்பித்துள்ளது.வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளின்படி இது பிழையானதாகச் சொல்லமுடியாது.

ஆயினும், அதே சமயத்தில், குறித்தவகை நிறைவேற்றத்திற்காக வாதிக்கு எதிராக 2-ஆம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட நிலைமுறையான உரிமை வழக்கு நிலுவையிலுள்ளபோது, எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவின்படியாக உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை, 2-ஆம் பிரதிவாதியால் வாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேற்படி உரிமை வழக்கின் விளைவுக்கு எப்போதும் உட்பட்டிருக்கவேண்டும் எனக் கருத்துரைக்கப்படவேண்டும், மேலும், அவர் இறுதியாக உரிமை வழக்கில் வெற்றியடைந்து, குறித்தவகை நிறைவேற்றத்திற்கான தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு, உடைமைக்கான தீர்ப்பாணையை (வேண்டுரைக்கப்பட்டால்) அறிவார்ந்த விசாரணை நீதிமன்றம் பிறப்பிக்குமானால், தேவையான பயன்கள் விளைவுறவேண்டும், மேலும் வாதி, மேல்முறையீடு தாக்கல் செய்வதற்குட்பட்டு, குறித்தவகை நிறைவேற்றத்திற்கான உரிமை வழக்கில் பிறப்பிக்கப் படலாகும் தீர்ப்பாணையைப் பின்பற்றி நடக்கவேண்டும்.

ஒப்பந்தத்தின் குறித்தவகை நிறைவேற்றத்திற்காக 2-ஆம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட உரிமை வழக்கில் அறிவார்ந்த விசாரணை நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட உறுத்துக்கட்டளை எதுவும் பின்னிட்டு, 2-ஆம்

பிரதிவாதி சார்பாக உறுத்துக்கட்டளை ஏதுமிருப்பின் அறிவார்ந்த விசாரணை நீதிமன்றத்தால் மாற்றியமைக்கப் பட்டாலன்றி, பாதிப்புக்குள்ளாகிவிடாது என்பது சொல்லாமலே விளங்கும்.

10. மேற்குறிப்பிடப்பட்ட காரணங்களுக்காகவும், மேற்படியானதைக் கருத்திற்கொண்டும், இந்த மேல் முறையீடு தோல்வியடைகிறது. உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையும், உத்தரவும், முந்தைய 9-ஆவது பத்தியில் செய்யப்பட்டுள்ள கருத்துரைகளுக்குட்பட்டு உறுதிசெய்யப்படுகிறது. வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளின்படி, செலவுத்தொகை குறித்து உத்தரவேதுமில்லை. உரிமையியல் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது.

மாண்புமிகு நீதியரசர் திரு. எம்.ஆர்.ஷா
மாண்புமிகு நீதியரசர் திரு. எ.எஸ். போபண்ணா

புது தில்லி,
04.10.2021

உரிமைத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும். "